# மியாட் ஆஸ்பத்திரியில் முதல் முறையாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை

## புதுவாழ்வு பெற்றதாக கல்லீரல் பெற்றவர் உருக்கம்




சென்னை மியாட் ஆஸ்பத்திரியில் முதல் முதலாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்ட வாலிபர் சிவகுமாருக்கு ஆஸ்பத்திரியின் நிர்வாக இயக்குனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ் வாழ்த்து தெரிவித்தபோது எடுத்தபடம். அருகில் ஆஸ்பத்திரியின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், இணை இயக்குனர் டாக்டர் பிரித்வி மோகன்தாஸ், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை குழு தலைவர் டாக்டர் ஜார்ஜ் சாண்டி, சிவகுமாரின் மனைவி ஆகியோர் உள்ளனர்.

சென்னை,பிப்.6-

சென்னை மியாட் ஆஸ்பத்திரியில் முதல் முதலாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை ஈரோட்டை சேர்ந்த வாலிபருக்கு செய்யப்பட்டது. அவர் தனக்கு புதுவாழ்வு கிடைத்துள்ளதாக உருக்கமாக தெரிவித்தார்.

### கல்லீரல் பாதிக்கப்பட்ட வாலிபர்

ஈரோடு மாவட்டம் கவுண்டம்பாடியை சேர்ந்தவர் சிவகுமார் (வயது39) இவருக்கு கல்லீரல் கெட்டுப்போய் செயல் இழந்து விட்டது. எனவே அவருக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்தால்தான் உயிர் வாழமுடியும் நிலை ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து அவரது மனைவி மற்றும் குடும்பத்தினர் சென்னை மியாட் ஆஸ்பத்திரிக்கு சென்று கல்லீரல் மாற்று அறுவைசிகிச்சை செய்துகொள்ள சம்மதித்தனர்.

### திருச்சி பெண்ணின் தானம்

இந்த நிலையில் திருச்சியை சேர்ந்த 2 குழந்தைகளின் தாய் ( வயது 31) தீவிர தலைவலி ஏற்பட்டு கோமா நிலைக்கு சென்றுவிட்டார். அவருக்கு மூளைச்சாவு ஏற்பட்டதாக நரம்பியல் நிபுணர் அறிவித்தார். இதைத்தொடர்ந்து, அந்த பெண்ணை இழந்த நிலையிலும், அந்த பெண்ணின் உறுப்புகளை தானமாக வழங்க அவரது குடும்பத்தினர் பெருந்தன்மையுடன் முன்வந்தனர்.

இந்த தகவல் ஜனவரி 5-ந்தேதி பிற்பகல் 3 மணிக்கு மியாட் ஆஸ்பத்திரி டாக்டர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

உடனே ஈரோட்டில் உள்ள சிவகுமாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர் 6-ந்தேதி காலை சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

அன்று பகல் 12 மணிக்கு மியாட் மருத்துவக்குழுவினர் திருச்சி சென்று பிற்பகல் 3மணிக்கு அந்த பெண்ணின் கல்லீரல் உள்ளிட்ட உறுப்புகளை அறுவைசிகிச்சை செய்து எடுத்தனர். அவை அனைத்தும் பொறுத்துவதற்கு உரிய தகுதி பெற்றிருந்தன.

### விமானத்தில் பயணித்த கல்லீரல்

பின்னர் மருத்துவக்குழுவினர் அன்று மாலை 6-45 மணிக்கு திருச்சி விமானநிலையத்திற்கு மருத்துவக்குழுவினர் சென்றனர். ஆனால் கல்லீரலை விமானத்தில் கொண்டு செல்ல மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் (சி.ஐ.எஸ்.எப்.) ஆட்சேபனை தெரிவித்தனர். மருத்துவக்குழுவினர் நிலைமையை விளக்கியபின்னர் அவர்கள் சம்மதித்தனர். பின்னர் விமானம் மூலம் இரவு 10 மணிக்கு சென்னை மீனம்பாக்கம் வந்து, ஆம்புலன்ஸ் மூலம் இரவு 10-15மணிக்கு மியாட் ஆஸ்பத்திரிக்கு கல்லீரலுடன் வந்தடைந்தனர். அதே நேரத்தில் சிவகுமார் மியாட் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அறுவை சிகிச்சைக்கு தயாராக்கப்பட்டார்.

### 8 மணிநேரம் அறுவை சிகிச்சை

உடனடியாக சிவகுமாருக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை டாக்டர் ஜார்ஜ் சாண்டி, டாக்டர் பாரி விஜய குமார் உள்ளிட்ட மருத்துவக்குழுவினர் செய்தனர். இந்த அறுவை சிகிச்சை 8½ மணிநேரம் நடந்தது. 6-ந்தேதி இரவு தொடங்கிய இந்த ஆபரேசன் 7-ந்தேதி காலை 6 மணிக்கு வெற்றிகரமாக முடிந்தது. கல்லீரல் பொறுத்தப்பட்ட சிவகுமார் நலமுடன் இருக்கிறார்.

இந்த அறுவை சிகிச்சை குறித்து மியாட் ஆஸ்பத்திரியின் நிர்வாக இணை இயக்குனர் டாக்டர் பிரித்வி மோகன்தாஸ் கூறியதாவது:-

### இலவச பரிசோதனை

எந்த ஒரு நவீன சிகிச்சையும் குறைந்த செலவில் தேவைப்படும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கவேண்டும் என்பதே எங்கள் மியாட் மருத்துவமனையில் நோக்கமாகும்.

மியாட் ஆஸ்பத்திரியில் கல்லீரல்மாற்று அறுவைசிகிச்சை பிரிவு ரூ.35 கோடியில் நவீன கருவிகளுடன் தொடங்கப்பட்டுள்ளது. நோய் தொற்று ஏற்படாதவகையில் அனைத்து வசதிகளும் உள்ளன. கல்லீரல் பொறுத்தப்படுவதற்கு முன்பு சிவகுமார் மிகவும் பலவீனமாக இருந்தார். அவருக்கு சில சிகிச்சை மூலம் அவரது உடலை பலப்படுத்தி அறுவை சிகிச்சைக்கு தயார் படுத்தினோம். பின்னர் பாக்டீரியா இல்லாத அதி நவீன மாடுலர் அறுவைசிகிச்சை தியேட்டரில் சிவகுமாருக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

இவ்வாறு டாக்டர் பிரித்வி மோகன்தாஸ் தெரிவித்தார்.

கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை குழுவின் தலைவர் டாக்டர் ஜார்ஜ் சாண்டி கூறியதாவது:-

கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. நோயாளி சிவகுமாருக்கு பொறுத்தப்பட்ட கல்லீரல் உடனடியாக வேலை செய்யத் தொடங்கியது. அவர் தற்போது பூரண நலத்துடன் இருக்கிறார்.

இவ்வாறு டாக்டர் ஜார்ஜ் சாண்டி தெரிவித்தார்.

### வாழ்த்து

மியாட் ஆஸ்பத்திரியின் நிர்வாக இயக்குனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ், ஆஸ்பத்திரியின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ் ஆகியோர் சிவகுமாருக்கு வாழ்த்து தெரிவித்தனர். அதற்கு சிவகுமாரும் அவரதுமனைவியும் நன்றி தெரிவித்தனர்.

டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ் கூறுகையில் நவீன மருத்துவ வசதிகளும், புதிய தொழில்நுட்பமும் ஒவ்வொரு ஏழைக்கும் கிடைக்கவேண்டும் என்பதே எங்கள் மியாட் ஆஸ்பத்திரியின் குறிக்கோள் என்றார்.

### புதுவாழ்வு

அறுவை சிகிச்சை செய்து கொண்ட சிவகுமார் கூறுகையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு பின்னர் நான் புதுவாழ்வு பெற்றுள்ளேன். அதற்காக மியாட் ஆஸ்பத்திரி மருத்துவக்குழுவினருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.